<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**MCOP.No.**362/2019

பெயர் :– சுவாதி (P.W.–)
த/பெ. :– சிவதாஸ்
தேதி :– 01.07.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை:–**

எனக்கு திருமணம் ஆகிவிட்டது. எனது அப்பா விபத்தில் இறந்தபோது நான் அன்னூரில் நான் எனது அப்பாவுடன் வசித்து வந்தேன். எனது அப்பாவுடன் நான் எனது அம்மா சுபா, எனது தங்தை தீபா (6ம் மனுதாரர் ), தங்கை ஹர்சிணி, தாத்தா ஆகியோருடன் வசித்து வந்தோம். சுபா எனது சித்தி முறையாவார். எனது அம்மா பெயர் சிந்து ஆகும். மாலை 06.00 மணிக்கு எனது அப்பா விபத்தில் அடிப்பட்டதை கேள்விப்பட்டோம். விபத்து குறித்து தாத்தா என்னிடம் கூறினார். தாத்தாவுக்கு விபரம் எப்படி தெரியும் என்ற விபரம் எனக்கு தெரியாது. கேள்விப்பட்டவுடன் நான், தாத்தா, சித்தி மற்றும் அருகில் இருந்தவர்களுடன் மருத்துவமனைக்கு சென்றோம். விபத்து குறித்து காவல் துறையில் புகார் கொடுத்தது யார் என்று எனக்கு தெரியாது. எனது அப்பா உயிருடன் இருந்தபோது எனது சித்தி, தாத்தா ஆகியோர்கள் சென்று பார்த்தார்களா என்ற விபரம் எனக்கு தெரியாது.

புகாரினை எனது சித்தி தான் கொடுத்துள்ளார். புகாரில் பழனிச்சாமி சம்பவம் பற்றி போன் மூலம் சித்தியிடம் தகவல் கூறினார் என்று முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. அந்த விபரம் எனக்கு தெரியும். பழனிச்சாமி மருத்துவமனையில் இருந்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. அவர் சொன்ன விபரம் தான் எனக்கு தெரியும். சம்பவம் நடந்தபோது எனது அம்மா எங்கு இருந்தார் என்றால் விளாவாடி என்ற கிராமத்தில் எனது மாமா வீட்டில் இருந்தார். மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் போது அப்பா பற்றி விபரங்களை மருத்துவர் தெரிந்துகொண்டாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. வாரிசு சான்றிதழ் இந்த வழக்கை பொருத்து நாங்கள் தாக்கல் செய்யவில்லை. அதனை பொருத்து சிவில் வழக்கு நடைபெற்று வருகிறது.

அந்த வழக்கின் விபரம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. சுபா என்பவர் எனது அப்பாவின் இரண்டாவது மனைவி அதன் அடிப்படையில் தான் வாரிசு சான்றிதழ் வாங்க முடியவில்லை என்றால் சரிதான். சம்பவ காலத்தில் எனது அப்பா கொத்தனார் வேலை பார்த்து வந்தார். அவர் சம்பவ காலத்தில் கட்டிட தொழிலாளர் சங்கத்தில் உறுப்பினராக இருந்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. எனது அப்பா கொத்தனார் வேலை பார்க்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக அவர் கொத்தனார் வேலை பார்த்து வந்தார் என்று சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா சம்பவ சமயத்தில் இருசக்கர வாகனத்தில் சென்ற போதுதான் விபத்து நடந்தது.

எனது அப்பாவுக்கு இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்தானது எனது அப்பாவுக்கு இருசக்கர வாகனம் ஓட்டத்தெரியாமல் வாகனத்தை ஓட்டி விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது அப்பா கொத்தனார் வேலைக்கு சென்று சம்பாதித்து வந்தார் என்றாலும், நான் சொல்லும் அளவிற்கு சம்பாதித்து வந்தார் என்று வழக்கிற்காக பொய்யா சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எந்த அடிப்படையும் இல்லாமல் நஷ்ட ஈடு அதிகம் பெற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது அப்பாவின் அஜாக்கிரதையால் நடந்தது என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.

## முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
## முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
## முதன்மை சார்பு நீதிபதி.
## MCOP.No.362/2019

பெயர் :– சிவலிங்கம் (P.W.–2)
த/பெ. :– திருவேங்கடம்
தேதி :– 01.07.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை:–**

நான் நிரந்தமாக கோயம்புத்தூரில் வசித்து வருகிறேன். தற்போதும் அங்கு தான் வசித்து வருகிறேன். விபத்து சம்பந்தமாக என்னிடம் தகவல் கூறியது யார் என்றால் எனது மகன் என்னை அழைத்துப்போக வந்து அழைத்துச்சென்றார். அப்போது தடாகம் என்ற இடத்தில் நான் இறங்கிக்கொண்டேன். திடீரென்று சத்தம் கேட்டது. சத்தம் கேட்டு நான்ஓடிச்சென்று பார்த்தேன். எனது மகன் அடிப்பட்டு கிடந்தார். அவர் உடல் முழுவதும் இரத்தமாக இருந்தது. அவரை மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்றார்கள் என்றால் யாரோ போன் செய்தார்கள். எனது மகனை எந்த வாகனத்தில் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்றவிபரம் எனக்கு தெரியாது. நான் மருத்துமனைக்கு சென்றேன். சிவசாமி என்ற எனது மகன் டாக்டரிடம் விபரங்களை கூறினார். சிவசாமிக்கு போன் செய்து அவரை வரவழைத்தேன். அதே போனில் வீட்டிற்கு தகவல் கூறி வரவழைத்தேன்.

விபத்து சாலை கிழக்கு மேற்கு சாலையாகும். எனது மகனின் வாகனத்தில் எதிரே எந்த வாகனம் மோதியது என்று நான் கவனிக்க வில்லை. நான் எனது மகனுடன் இருசக்கர வாகனத்தில் சென்ற விபரம் எனது மருமகள் மற்றும் பேத்தி ஆகியோருக்கு தெரியும். நான் சொல்வதுபோல் எனது மகனுடன் நான் செல்லவில்லை சம்பவம் பற்றி கேள்விப்பட்டு மருத்துவமனைக்கு தான் சென்றேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் நான் இருந்தபோது போலீசார் வந்தார்களா என்றால் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொல்லுவதுபோல் நான் இருசக்கர வாகனத்தில் சென்றேன் என்ற கூறுவது வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும், வழக்கிற்காக எனது மகனுடன் சென்றேன் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.